கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.24/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | வயது | 60 |
| தந்தை பெயர் | வீரப்பன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | தப்ளாம்புலியூர் | தாலுக்கா | |

(1, 2 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 3 வது எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் தப்ளாம்புலியூரில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி ஐயப்பனையும் தெரியும். எனது மனைவி உட்பட ஆஜர் எதிரி மணிகண்டனின் அம்மா மற்றும் மூவர் குழு சேர்ந்து HDFC வங்கியில் கடன் பெற்றிருந்தனர். மேற்படி வங்கியில் வாங்கிய கடனை குழுவில் இருந்த ஆனந்தியை தவிர மற்ற நால்வரும் திரும்பி செலுத்திவிட்டனர். இதுகுறித்து HDFC வங்கியின் மேலாளர் எங்களிடம் கேட்டார். நாங்கள் கட்டிவிட்டோம். ஆனந்தியிடம் கேட்கும் படி சொன்னோம். HDFC வங்கியின மேலாளார் ஆனந்தி வீட்டில் சென்று கேட்டதால் ஆனந்தி கண்ட கண்ட நாயெல்லாம் சொல்லி பணம் கேட்கிறார் என்று சொல்லி எனது மருமகள் சரண்யாவை திட்டினார். எனது மகன் வினோத்தையும் திட்டினார். மறுநாள் 16.10.2021 ம் தேதி நாங்கள் வீட்டில் இருந்தபோது 03.00 மணிக்கு மணிகண்டன், ஐயப்பன், விஜயகுமார் மற்றும் மணிகண்டன் நால்வரும் எங்கள் வீட்டிற்கு வந்து தேவடியா மகனே, குச்சிகாரி மகனே என்று என்னை திட்டி, என்னை வீட்டில் இருந்து வெளியே வாடா என்று சொல்லி நான் வெளியே வந்ததும், ஆஜர் 1 வது எதிரி எனது வலது பக்க பின் முதுகில் கத்தியால் குத்தியும், இடது கையில் பின்புறம் கத்தியால் குத்தியும் , இடது நடுவிரலில் கத்தியால் குத்தினார். ஆஜர் எதிரி விஜயகுமார் எனது மகன் வினோத்தை கட்டையால் அடித்தார். எனது மற்றொரு மகன் புருசோத்தமனை மணிகண்டன் த/பெ.

தங்கராசு என்பவர் அரிவாளால் இடது கையில் வெட்டி விட்டார். எதிரிகள் என்னை தாக்கியதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. எனது மனைவி 108 ஆம்புலன்சு மூலம் என்னை திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த சம்பவம் குறித்து போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**இந்த புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பின்னர் எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தனர் என்றால் எனக்கு அடிப்பட்டு நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் விசாரணை செய்தனர். புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எழுதப்பட்ட வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டது. புகார் வாக்குமூலம் என்னிடம் படித்து காண்பிக்கப்பட்டது என்றால் படித்து காண்பிக்கப்பட்டது. 1 வது எதிரியின் தாயார் மகளிர் சுய உதவி குழுவில் தலைவியாக இருந்தார் என்றால் சரிதான். எனது மருமகள் சரண்யா என்னவாக இருந்தார் என்றால் துணை தலைவியாக இருந்தார். குழுவின் பணத்தை இருவரும் வசூல் செய்வார்கள் என்றால் சரிதான். எனது மருமகள் சரண்யா வசூல் செய்த குழு பணத்தை குழு தலைவியான 1 வது எதிரியின் அம்மாவிடம் சரியாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மருமகள் சரண்யாவிடம் குழுவின் தலைவியான ஆனந்தி அவ்வபோது வந்து குழு பணத்தை கேட்பார் என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் தாயார் ஆனந்தி எனது வீட்டிற்கு வந்து அடிக்கடி வசூல் செய்த பணம் என்ன ஆனது என அடிக்கடி பிரச்சனை செய்த காரணத்தினால் நானும், எனது மகன்களும் 1 வது எதிரியின் வீட்டிற்கு சென்று 1 வது எதிரியின் தாயாரிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் பிரச்சனை செய்த போது ஊரில் உள்ளவர்கள் எங்கள் தடுக்க வந்தபோது அவர்களிடம் தப்பிக்கும் போது நான் முதல் விசாரணையில் ஏற்பட்ட காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எத்தனை பேர் பார்த்தனர் என்றால் நான்கு பேர் பார்த்தனர். சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்ன ஆனது என்றால் எதிரிகள் கையோடு எடுத்து வந்தார்கள். மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் எங்கள் வீட்டிற்கு

வரவில்லை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி வில்லை, எங்களை தாக்கி காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரியின் தாயார் , தகப்பனார் நான் பிரச்சனை செய்து தப்பித்து ஓடிம் போது தவறி விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை காரணமாக வைத்து எதிரிகள் மீது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சனை செய்ததை அடுத்து அவர்கள் புகார் கொடுத்து விடுவார்கள் எண்ணி அதில் இருந்து தப்பிப்பதற்காக முன்னெச்சரிக்கையாக நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், இந்த எதிரிகளுக்கும் யாதொரு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:07:03 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.